பச்சையப்ப முதலியாரின் வாழ்க்கை (1754 - 1794)

பச்சையப்ப முதலியார் காஞ்சிபுரத்தின் வடகிழக்கே நாற்பது மைல் தொலைவில் உள்ள பெரியபாளையம் என்ற ஊரில் 1754ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தந்தை காஞ்சிபுரம் விசுவநாத முதலியார், பச்சையப்பர் பிறப்பதற்குச் சில தீங்கள்கள் முன் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அவரது குடும்பம் பெருந்துயரத்தில் ஆழ்ந்தது. பச்சையப்பரின் தாய் பூச்சி அம்மாள் ஐந்தே வயது நிரம்பிய பச்சையப்பரையும், பச்சையப்பரின் இரு சகோதரிகளையும் உடனழைத்துக் கொண்டு. சென்னையை அடைந்து, சாமி மேஸ்திரி தெருவில் ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் செல்வாக்கு மிகுந்த ஆங்கில வணிகர்களுக்கு வணிகத் தொழிலில் உதவி புரிந்துகொண்டு மொழி பெயர்ப்பாளராய் விளங்கிய நாராயணப் பிள்ளை என்ற செல்வரிடம் அடைக்கலம் புகுந்தார். நாராயணப் பிள்ளை தமக்கே உரிய பெருந்தன்மையுடன் அவரைத் தம் உடன்பிறந்தானைப் போல் போற்றி, இளைய பச்சையப்பருக்குக் கணக்கு, கடிதத் தொடர்பு முதலியவற்றில் பயிற்சி பெறவும் ஆங்கில மொழியில் அடிப்படை அறிவைப் பெறவும், கல்வி ஏற்பாடுகளைச் செய்தார்.

பச்சையப்பர் ஆங்கிலத்தை விரைவாகக் கற்றதுடன், வணிகத் தொழிலுக்கான செயலூக்கத்தைத் தொடக்கத்திலேயே காட்டினார். முதலில் சென்னையில் உள்ள ஆங்கில வணிகர்கள் இறக்குமதி செய்த பொருட்களை விற்பதிலும், ஏற்றுமதிக்கான பொருட்களை அவர்களுக்கு ஈட்டித் தருவதிலும்,

சிறிய அளவில் செயற்படும் முகவராக ஆனார். நாராயணப் பிள்ளையின் முயற்சியால் பச்சையப்பர் அக்காலத்தில் தமிழ் மாவட்டங்களில் வணிகம் புரிந்த நிக்கோலசு என்பவருக்கு மொழி பெயர்ப்பாளராக அமைந்தார். இந்நிலையில், தென் மாவட்டங்களில் பரவலாகப் பயணம் செய்து, கணிச மான பணமும் ஈட்டினார். தம் இளம் வயதிலேயே அவர் சமய நம்பிக்கை உடையவராயிருந்தார். 1774ஆம் ஆண்டு தம் இருபதாவது வயதில் காஞ்சி புரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் திருமண மண்டபம் ஒன்றைக் கட்ட நிதியுதவினார். அந்தக் கோயிலில் இரண்டு புனித உருவங்களும் நிறுவப் பெற்றன. திருக்குட நீராட்டு விழாவும் சிறப்பான முறையில் நிகழ்வுற்றது.

1776ஆம் ஆண்டில், பச்சையப்பர் செங்கற்பட்டு மாவட்டத்தில் தம் வணிகத் தொடர்புகளை விரிவாக்கி, கடன் கொடுக்கல் வாங்கல். கணக்கு வழக்குகளில் சிறந்த தீர்வு காண்பவர் என்ற பெயருடன் விளங்கினார்.

கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்குப் பல கிராமங்கள் செலுத்த வேண்டிய நிலவரித் தொகையை, தாம் ரொக்கமாகச் செலுத்துவதாக உறுதி கூறினார். அவ்வாறே செய்யும் பணியில் ஈடுபட்டார். ஆங்கில வணிகர்களுக்கும், கர்நாடக நவாபின் அரசியல் அலுவலர்களுக்கும் இடையில் முகவராகத் திறமுடன் பணியாற்றி, இரு தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றார்.

அடுத்த சில காலத்திற்குள், கர்நாடக நவாபின் அரசவையில் பிரிட்டிஷ் அரசியல் பிரதிநிதியாய்ப் பொறுப்பு வகித்தவரும், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குழு உறுப்பினருமான ஆர்.ஜே.சல்லிவன் என்பவருக்கு முதுநிலை மொழி பெயர்ப்பாளராக ஆனார். 1783ஆம் ஆண்டு சல்லிவன் படைகளுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதில் அவருக்குத் துணையாளராகப் பச்சையப்பர் நியமிக்கப்பட்டார். பச்சையப்பர் காட்டிய அக்கறையும், அவரது தூண்டும் திறனும் செயல் திறனும் இப்பணியில் அவர் பெற்ற வெற்றியும் அதிகாரிகளின் பாராட்டுதல்களை அவருக்குப் பெற்றுத் தந்தன. இதையடுத்த குறுகிய காலத்தில், தஞ்சை மன்னரின் பணியில் பச்சையப்பர் ஈடுபட்டார். தஞ்சை மன்னர் ஆண்டுக்குரிய வரிப் பணத்தை ஒரே சீராகவும், பெருந் தொகையாகவும் செலுத்த முடியாமல் இடர்ப்பட்டார்.

மன்னரின் ஆண்டு வரித்தொகையைச் சென்னைக்குச் சீரான தவணைகளில் செறுத்துவதற்கு உதவியாக அவருடைய முகவராகவும் செயல் புரிந்தார்.

செறுத்தும் தொகையில் பத்து முதல் இருபது விழுக்காடு வரை தமக்குத் தரகுத் தொகையாகப் பெற்றார். கர்நாடக நவாபின் ஆளுகைக்குட்பட்ட தென் பகுதியிலிருந்த பல பாளையக்காரர்களுக்குக் கணக்கு வழக்குகளில் சிறந்த தீர்வு காண்பவராகவும் விளங்கினார். இப்படிப் பல வழிகளிலும் முயன்று. இவர் சுமார் இருபது இலட்சம் ரூபாய்க்கு உடைமையாளரானார். தமக்காக, சென்னையில் கோமனிஸ்வரன்பேட்டையில் மிகப் பெரிய வீடு ஒன்றையும் கட்டிக் கொண்டார். இன்றும் அப்பகுதியிலுள்ள தெரு. அவர் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது.

1787ஆம் ஆண்டு அமர்சிங் தஞ்சை மன்னரானதும் அன்றைய சென்னை ஆளுநராயிருந்த சர்.ஆர்ச்சிபால்ட் கேம்பெல் என்பார், தஞ்சைப் பகுதியில் வருவாய்த்துறை ஆணையாளராயிருந்த வில்லியம் பெட்ரி என்பவருக்குப் பணித் துணைவராகப் பச்சையப்பரை நியமித்தார். தஞ்சை மன்னர் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிக அளவில் செலுத்த வேண்டியிருந்த வரிபாக்கிக்காக அவருக்குப் பெரிய தொகையைப் பச்சையப்பர் கடனாக வழங்கினார். தஞ்சாவூரிலிருந்து ஆண்டு வரியைச் சீராகச் செலுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து முடித்த பிறகு, பெட்ரி சென்னைக்குத் திரும்பினார். பச்சையப்பர் தஞ்சை மன்னரின் அரசவையிலேயே தாங்கித் தம் பதவிக்குரிய மரியாதைகளுடன் உயர்ந்த வாழ்க்கையை நடத்தி வந்தார்.

பச்சையப்பரது தகுதியையும், பெருமையையும் கண்டு தஞ்சையிலிருந்த ஆங்கில வணிகள் சிலர் பொறாமை கொண்டனர். தஞ்சையில் உள்ள கடன் வழாங்குவோர் சிலகும், அவர்களில் முக்கியமாகப் பச்சையப்பரும் தஞ்சை மன்னருக்கு அதிக வட்டிக்குப் பணத்தைக் கடனாக வழங்கி அதன் மூலம் மன்னரின் வீண் ஆடம்பரச் செலவுக்குக் காரணமாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை இவ்வணிகர்கள் அரசிடம் தெரிவித்தனர். மேலும் இத்தகையோரைத் தஞ்சையிலிருந்து அகற்றுவதே மக்களுக்கும், மன்னருக்கும் நன்மை பயக்குமெனவும் கூறினர். இதன் காரணமாக, பச்சையப்பர் சென்னைக்கு வந்து தஞ்சை அரசவையில் தமக்கு

அளிக்கப்பட்டிருக்கும் சிறப்புத் தகுதி ஆர்ச்சிபா கேம்பெல் அவர்களின் ஆணையென்றும் தன்னை அப்பதவியிலிருந்து அகற்றுவது மேற்குறிந்த ஆணைக்குப் புறம்பான செயலாகும் என்றும் விளக்கினார். விசாரணைக்குப் பிறகு 179ஆம் ஆண்டும் பச்சையப்பர் குற்றமற்றவர் என்பது உறுதியாயிற்று

170ஆம் ஆண்டில் பச்சையப்பர் சென்னையில் தங்கியிருந்த பொழுதுதான் சிதம்பரம் சபாநாயகர் கோவிலுக்கு அறங்கள் பல செய்து அறக்கட்டளையும் உருவாக்கினார். உள் கருவறையைத் தூய்மையாக்கி அழகுறுத்தினார். கீழைக் கோபுரத்தின் மேற்பகுதி நுழைவாயிலில் செதுக்கியுள்ள பச்சையப்பரின் உருவத்தையும், சகோதரி சுப்பம்மாவின் உருவத்தையும் இன்றும் காணலாம். அன்றாடம் நிகழும் இறைவழிபாட்டின் போது பயன்படுத்துவதற்கென நிரம்ப வெள்ளிக் கலங்களையும் வழங்கினார். ஆனித் திருமஞ்சனம் என்ற விழாவை (பிரம்மோத்சவம்) ஆண்டுதோறும் கொண்டாடும்படி நிறுவி அவ்விழா தடையிலாது நடைபெறத் தக்க பொருளுதவியைத் தம் பிற்கால விருப்ப ஆவணத்தில் முறையாகச் செய்தார்.

1792ஆம் ஆண்டு தஞ்சைக்குத் திரும்பிய பச்சையப்பர் மீண்டும் தம் பணிகளைத் தொடர்ந்ததுடன் வாங்கிப் பணியையும் மேற்கொண்டார். பச்சையப்பருக்கு ஆண் மக்கள் இல்லை. தம் சகோதரி மகளை முதலில் மணம் புரிந்து கொண்ட அவர் மகப்பேறில்லாததால், தஞ்சையில் இரண்டாவது மணம் புரிந்து கொண்டார். ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையானார். இந்த நேரத்தில் உடல் நோயுற்றார். நோய் முற்றியதால் கும்பகோணத்திற்கு மருத்துவத்திற்காகச் சென்று தங்கினார். அங்குத் தாங்கிய குறுகிய காலத்தில் சில ஆண்டுகளுக்கு முன் தாம் தொடங்கியிருந்த சத்திரத்தைக் கட்டி முடித்தார். இவ்விடத்தில்தான், அன்னாரது வரலாற்றுச் சிறப்புமிக்க விருப்ப ஆவணம் (உயில்) 1794ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22ஆம் நாள் உருவாயிற்று.

தமக்கு ஆண் மகவு எதுவும் இல்லாத நிலையில் தம் செல்வங்கள் அனைத்தையும் முழு மனதுடன் கார்ன், சிவபெருமானின் புனித சேவைக்கும், திருமாவின் புனத சேவைக்கும், பல்வேறு கோவில்களிலும், யாத்திரைத் தலங்களிலும் உள்ள அறங்களுக்கும், சமயச் சார்பான கட்டிடங் களைக் கட்டுவதற்கும், கொடைப் பணிகளுக்கும், ஏழை மக்களுக்கும், வடமொழிக் கல்விக் கூடங்களுக்கும் மற்றும் உள்ள பொதுவான அமைப்புப் பணிகளுக்கும் தம் முழு அறிவு உணர்வுடன் அர்ப்பணித்தார்.